மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், காங்கயம்

<u>அசல் வழக்கு எண்.43/2022</u>

2026ம் ஆண்டு ஜனவரி 21ம் நாள் புதன்கிழமை வாதி/பிரதிவாதி தரப்பு சாட்சியின் வாக்குமூலம் 1969ம் ஆண்டு சட்டத்தின் ஏற்பாட்டின்படி திருமதி.கே.எஸ்.மாலதி, பி.ஏ., பி.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி, காங்கயம் அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | கோவிந்தசாமி | தொழில் | |
| த/பெ | | ஊர் | |
| வயது | | தாலூக்கா | காங்கேயம் |
| மதம் | இந்து | மாவட்டம் | திருப்பூர் |

<u>21.01.2026 பி.வா.சா.1 ஆஜர் சத்தியப்பிரமாணம் செய்துவைக்கப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1. நான் பத்தாம் வகுப்பு வரை படித்துள்ளேன். வாதி என்ன வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்பதை குறித்து நான் தெரிந்து கொண்டேனா என்றால் தெரிந்து கொண்டேன் நான் தாக்கல் செய்துள்ள முதல் விசாரணை நிரூபன வாக்குமூலத்தை யார் தயார் செய்தார்கள் என்றால் நான் தான் தயார் செய்தேன். அதில் உள்ள விபரங்கள் எனக்கு தெரியும் என்றால் சரிதான். எனது தாத்தா பெயர் பழனிச்சாமி என்றால் சரிதான் அவருக்கு மூன்று நபர்கள் ஆண் வாரிசுகள் என்றால் சரிதான்.

2. எனது தகப்பனார் பெயர் சுப்பராய கவுண்டர் என்றால் ஆமாம். எனது சித்தப்பாக்கள் பெயர் சின்னச்சாமி மற்றும் முத்துசாமி கவுண்டர் என்றால் சரிதான். தாவா சொத்தை பொறுத்து ஆதியில் எனது தாத்தா 15.04.1974 தேதியில் வா.சா.ஆ.1 ஆவணத்தின் அடிப்படையில் பாகப்பிரிவினை செய்து கொண்டார் என்றால் சரிதான். மேற்படி

வா.சா.ஆ.1 பாகப்பிரிவினை ஆவணத்தில் பிஏபி வாய்க்கால் பாசன ஆயகட்டிற்கு  கட்டுப்படாதவைகள் என்று சொல்லி தான்மேற்படி ஆவணத்தை ஏற்படுத்தி உள்ளார்கள் என்று சொன்னால் சரிதான். ஆனால் 1985 தேதியில் தான் அந்த சொத்துக்கள் பிஏபி வாய்க்கால் பாசன ஆய்வு கட்டுக்கு சேர்க்கப்பட்டது. 1985 ஆம் ஆண்டில் தான் எங்கள் சொத்துக்கள் பிஏபி பாசன ஆயகட்டிற்கு சேர்க்கப்பட்டது என்பதை பொறுத்து எங்கள் தரப்பில் ஆவணங்கள் ஏதேனும் தாக்கல் செய்துள்ளோமா என்றால் இல்லை.

3. 1974 பாகப்பிரிவினை ஆவணத்தின் அடிப்படையில் தான் எனது தகப்பனார் மற்றும் அவரது சகோதரர்கள் 2002 ஆம் ஆண்டு வா.சா.ஆ.2 ஆவணத்தின் அடிப்படையில் பாகப்பிரிவினைசெய்து கொண்டார்கள் என்றால் சரிதான்.

(ஆவணங்கள் பார்வையிட வேண்டுமென்ற வாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளின் பேரில் பி.வா.சா.1ன் குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது)

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் சரிபார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கைரேகை செய்தும்/கையொப்பம் செய்தும் ஒப்புக்கொள்ளப்படுகிறது.

K S MALATHI

Digitally signed by K S MALATHI
Date: 2026.01.21 18:57:36 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி, காங்கயம்